# தொல்லியல் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2011–2012

## முன்னுரை

பெரும்பாலான மக்கள் பண்டைய காலத்தை குறித்து அறிந்து கொள்வதிலும், முன்னோர்கள் விட்டுச்சென்ற வாழ்வியல் தடயங்களை அறிந்து கொள்வதிலும் ஆர்வம் உள்ளவர்களாய் இருக்கின்றனர். சாதாரண மனிதன் ‘தொல்லியல்’ என்பதனை ‘தோண்டுதல்’ என்பதாகவே கருதுகிறான். கிரேக்க மொழியில் ‘ஆர்க்காய்ஸ்’ என்பது பண்டைய அல்லது பழமை என்கிற பொருளைக் குறிக்கிறது. மேலும் ‘லோகோஸ்’ என்பது ஒரு பொருளை பற்றி படிப்பது, அதாவது அறிவியலாகும். இது பண்டைய மனிதர்களின் வாழ்வினை அவர்கள் விட்டுச் சென்ற எச்சங்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது. இது அவர்கள் பண்பாட்டினைப் பற்றி புரிந்து கொள்வதற்கும், வரலாற்றினை தெரிந்து கொள்வதற்கும், பழைய மரபுகளை பாதுகாப்பதற்கும் உதவுகிறது. மேலும், இது சுற்றுலாவிற்கு மிகப் பெரிய பங்களிப்பினையும் அளிக்கின்றது. அன்றைய மனிதர்கள் விட்டுச் சென்ற பண்பாட்டு நினைவுச் சின்னங்கள் மூலமாகவும் மானிட வரலாற்றினை அறிந்து கொள்வதற்கும் தொல்லியல் மற்றுமொரு வழிமுறையாக விளங்குகிறது. எழுத்துச் சான்றுகள் உள்ள வரலாற்றுக் கால கட்டங்களிலும், சில விடுபட்டுப்போன காலங்களின் நிகழ்வுகளை நிரப்பிடுவதற்கான பணிகளை செய்வதற்கும் பயனுள்ள துணை நிலை சான்றுகள் வழங்குவதற்கும் தொல்லியல்துறை வகைசெய்து கொடுக்கின்றது. தொல்லியல் என்பது தொடர் ஆராய்ச்சி செய்வது; புதிய கண்டுபிடிப்புகளை கண்டறிவது; முற்றுப் பெறா பயணத்தில் அனைத்தும் நிச்சயமில்லாமல் தொடர்ந்து பயணிப்பது போன்றதாகும்; இறுதியானது அல்ல. தொல்லியல் என்பது நம் முன்னோர்கள் விட்டுச்

சென்ற கருவிகள் மற்றும் பொருட்கள் அடிப்படையில் அமைந்துள்ளது என்பதே நாம் எப்பொழுதும் பெரும்பாலும் அறிந்ததாகும் .

## தொல்லியல் துறை

தமிழ்நாடு அரசால் 1961–ஆம் ஆண்டு பழங்கால நினைவுச் சின்னங்களைப் 'பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்' என்பதையும், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்களில் அகழாய்வு மேற்கொள்வதையும் முதன்மையான நோக்கமாகக் கொண்டு தொல்லியல் துறை தொடங்கப்பட்டது. அதன் பின்னர் கல்வெட்டெழுத்துக்களைப் படியெடுத்து, படித்து, பதிப்பித்து அதனை ஆவணங்களாக்கி வெளியிடுதல் மற்றும் கலைப்பொருட்களை வேதியியல் முறையில் பராமரிப்பு செய்தல், பழங்கலைப் பொருட்களைப் பதிவு செய்தல் போன்ற பணிகளுடன் விரிவுபடுத்தப்பட்டது. ஆராய்ச்சியாளர்களின் பயன்பாட்டிற்கென சென்னை தலைமை அலுவலகத்தில் ஒரு தனி நூலகமும் இயங்கி வருகிறது. அகழ்ந்தெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் 14 தொல்லியல் அகழ்வைப்பகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

## பாதுகாப்பு

தமிழக அரசு இதுவரை சமயம் சார்ந்த மற்றும் சமயம்சாரா 85 புராதன மற்றும் வரலாற்றுச் சின்னங்களை 'பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக' அறிவித்துள்ளது. பதினோராவது நிதிக்குழு மானியத்தின் (2001–2005) கீழ் 25 வரலாற்றுச் சின்னங்கள் ரூ.428.35 இலட்சத்தில் சீரமைக்கப்பட்டது. பன்னிரெண்டாம் நிதிக்குழு மானியத்தின் (2006–2010) கீழ் 40 வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்க ரூ.780 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்தொகையில் குறிப்பாக மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை பராமரிப்பு பணிக்காக ரூ.300 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன. பன்னிரெண்டாம் நிதிக்குழு மானியத்தின் கீழ் வரலாற்றுச் சின்னங்களை ஆவணப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அச்சின்னங்களின் பொது விவரங்கள் புத்தகமாகவும் வெளியிடப்பட்டுள்ளன.

புராதன சின்னங்கள், தொல்லியல் இடங்கள் மற்றும் பழம்பெருமை மிக்க மரபு பொருட்களைப் பாதுகாப்பது குறித்து தொடர்புடைய பல்வேறு துறை அலுவலகங்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ‘வருங்கால சந்ததியினருக்காக பழஞ்சின்னங்களைப் பாதுகாத்தல்’ எனும் தலைப்பில் தமிழக அரசின் சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறையால் 4.8.2009 அன்று ஒரு நாள் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. மேலும், இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் பாதுகாக்கப்பட்டு வரும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்களை தமிழ்நாட்டில் பாதுகாக்கும் பொருட்டு, தொல்லியல் சின்னங்கள், தொல்லியல் பரப்பிடங்கள் மற்றும் எச்சங்கள் (திருத்தம் மற்றும் செல்லத்தக்க) சட்டம் 2010–ன் கீழ் தமிழகத்தின் ஒருங்கிணைப்பாளராக தொல்லியல் துறையின் முதன்மை செயலாளர் மற்றும் ஆணையரை ‘தகுதி வாய்ந்த அலுவலராக’ அரசு நியமித்துள்ளது.

## தேசிய நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல் பொருட்கள் ஆவணப்படுத்தும் குழு

தேசிய நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் பழம்பொருட்களைப் பாதுகாத்து பராமரிக்கும் பொருட்டு, தேசிய நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல் பொருட்கள் ஆவணப்படுத்தும் குழு ஒன்று இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையால் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மாநில தொல்லியல், அருங்காட்சியகங்கள் மற்றும் இந்து சமய அறநிலையம் ஆகிய துறைகளால் தமிழகத்திலுள்ள புராதன கட்டடங்கள் மற்றும் தொல்பொருட்களை ஆவணப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு வல்லுநர் ஒருவரும், கணினி விவர பதிவாளர் இருவரும் கொண்ட ஒரு சிறப்பு குழு நியமிக்கப்பட்டு தற்போது பணிகள் துறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது இத்திட்டத்தினை செயல்படுத்துவதால் வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் பழம் பொருட்கள் குறித்த வரலாற்றினை வருங்கால சந்ததியினர் மேலும் சிறப்பான முறையில் புரிந்து கொள்ள உதவும்.

## அகழாய்வு மற்றும் அகழ்வைப்பகம்

மாநிலத்தில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அகழாய்வு மேற்கொள்வது இத்துறையின் பெரும் பணிகளில் ஒன்றாகும். இதுவரை துறையால்

அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட 34 இடங்களில் 33 இடங்களில் மேற்கொண்ட அகழாய்வுகளின் அறிக்கைகள் நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. இவ்வகழாய்வுகளில் கிடைக்கப்பெற்ற கலைப்பொருட்கள் இத்துறையின் கீழ் மாநிலத்தின் பல மாவட்டங்களில் செயல்படும் 14 அகழ்வைப்பகங்களில் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்களின் பார்வைக்காக பாதுகாக்கப்பட்டு, காட்சிபடுத்தப்பட்டுள்ளன. திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், இராஜாக்கள்மங்கலத்தில் ரூ.2.00 இலட்சத்தில் நடைபெற்ற அகழாய்வுப் பணி நிறைவு பெற்று அறிக்கையினை நூலாக வெளியிடும் பணி நடைபெற்று வருகின்றது. அதே போன்று, நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டத்தில் உள்ள தலச்சங்காடு எனும் இடத்தில் அகழாய்வு செய்யும் பணி ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் முற்றுப் பெற்றுள்ளது.

## கல்வெட்டு

கல்வெட்டுகளைப் படியெடுத்து, படித்து, பதிப்பித்து நூலாக வெளியிடுவது தொல்லியல் துறையின் முதன்மைப் பணிகளில் ஒன்றாகும். தமிழகத்திலுள்ள 25,000 கல்வெட்டுகளில் இதுவரை 25 மாவட்டங்களில் 23,500 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. தற்போது திருவண்ணாமலை, சேலம், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் பிற மாவட்டங்களில் விரைவில் ஆரம்பிக்கப்படும். கல்வெட்டுகளைப் படியெடுக்கும் பொருட்டு 2004–2005 ஆம் ஆண்டு கல்வெட்டு முனைப்புத் திட்டத்தில் மட்டும் துறை கல்வெட்டாய்வாளர்களால் 15,000 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு, 14,000 கல்வெட்டுகள் படிக்கப்பட்டுள்ளன. இதேபோன்று 5,796 கல்வெட்டுகள் 40 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. இதுவரை 5,000 கல்வெட்டு மைப்படிகள் எண்ணிலக்கம் செய்யப்பட்டுள்ளன.

தொல்லியல் துறையின் சென்னை தலைமை அலுவலகத்தில் 1974 ஆம் ஆண்டு முதல் ஒரு கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் முதுகலைப் பட்டம் பெற்ற எட்டு மாணவர்களுக்கு ‘கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்’ எனும் பிரிவில் ஓராண்டு முதுநிலைப் பட்டய படிப்பினை நடத்தி வருகிறது. மாதந்தோறும்

ரூ.2000/– இந்த எட்டு மாணவர்களுக்கு பயிற்சி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ், இதுவரை 200 மாணவர்கள் முதுநிலை பட்டயம் பெற்றுள்ளனர்.

தொல்லியல் துறையும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் இணைந்து ‘கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்’ எனும் பயிலரங்கத்தினை 70 கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு 3.1.2011 முதல் 12.1.2011 வரை மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையில் ரூ. 2.50 இலட்சம் செலவில் நடத்தியது.

## வெளியீடுகள்

தொல்லியல் துறையில் தமிழிலும், ஆங்கிலத்திலும் புத்தகங்கள் வெளியிடுவதற்காக தனியே ஒரு அச்சுப்பிரிவு செயல்பட்டு வருகின்றது. கல்வெட்டுகள், தொல்லியல் சின்னங்கள், அகழாய்வு அறிக்கைகள், மாவட்ட தொல்லியல் கையேடுகள், அருங்காட்சியகக் கையேடுகள் மற்றும் கோயில் ஆய்வேடுகள் ஆகியவை நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. இதுவரை, இத்துறையால் மொத்தம் 240 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இத்துறை அச்சுப்பிரிவு வாயிலாக ‘கல்வெட்டு’ எனும் தலைப்பில் தமிழில் காலாண்டு இதழ் ஒன்று வெளியிடப்படுகிறது. இதுவரை 83 இதழ்கள் வெளியிடப் பட்டுள்ளன. தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வரும் அனைத்து சின்னங்களின் விவரங்கள் அடங்கிய சிறப்புக் கையேடு (Coffee Table Book) வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் சுற்றுலா பயணிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. பார்வையாளர் களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் சுற்றுலாத் துறையின் மூலம் திருமலை நாயக்கர் அரண்மனை, கமுதி கோட்டை மற்றும் இராமலிங்க விலாசம் அரண்மனை ஆகிய சின்னங்கள் மற்றும் அகழ்வைப்பகங்களின் விவரங்கள் அடங்கிய கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், திருஇந்தளூர் செப்பேடுகள் மற்றும் கண்காட்சி குறித்த கையேடுகளும் வெளியிடப்பட்டுள்ளன.

### புகைப்படம்

இத்துறையின் நிழற்படமெடுப்பவர்கள் பல்வேறு கோயில்கள், சிற்பங்கள், சுவரோவியங்கள் மற்றும் பழம்பொருட்களை நிழற்படங்களாக எடுக்கின்றனர். அகழாய்வுப் பணிகள் நடைபெறும் போதெல்லாம், அகழாய்வின் பல்வேறு நிலைகள் மற்றும் அகழாய்வு இடங்கள் குறித்த விவரங்கள் படமெடுக்கப்பட்டு போதிய புகைப்படங்களுடன் சிறப்பாக

ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், மரபுச் சின்னங்களை பராமரித்தல் போன்ற பணிகளும் படமெடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்படுகின்றன.

**வேதியியல் பாதுகாப்பு**

அகழாய்வின் போது கிடைக்கப் பெறுகின்ற தொல்பொருட்களை வேதியியல் முறையில் பாதுகாத்தலுக்காக வேதியியல் பாதுகாப்பு பிரிவுகள் சென்னை மற்றும் மதுரையில் உருவாக்கப்பட்டுள்ளன. பின்னர், இப்பிரிவுகளின் பணிகள் 14 அகழ்வைப்பகங்களில் உள்ள தொல்பொருட்களை வேதியியல் முறையில் பாதுகாத்தலுக்காகவும் மற்றும் கட்டமைப்பு பாதுகாப்பு பிரிவுடன் ஒருங்கிணைந்து 85 மரபுச் சின்னங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காகவும் விரிவுபடுத்தப்பட்டது. வேதியியல் முறையில் பல்வேறு இடங்களில் பராமரிப்பு பாதுகாப்புப் பணிகள் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், 12–வது நிதிக்குழு மானியத்தின் கீழ் வேதியியல் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் சிறப்பு கண்காட்சியில் 130 அரிய கலைப்பொருட்கள் வேதியியல் முறையில் சுத்தம் செய்யப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டன.

**பழம்பொருட்களை பதிவு செய்தல்**

மத்திய அரசு, பழமையான கலைப் பொருட்கள் இந்தியாவிலிருந்து கடத்தப்படுவதைத் தடை செய்வதற்கு 'பழம் பொருள் பாதுகாப்புச் சட்டம் – 1972'–ஐ இயற்றியுள்ளது. இச்சட்டத்தினை தமிழகத்தில் சிறப்பாக நடைமுறைப்படுத்த சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் இரண்டு பதிவு அலுவலர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. தமிழ் நாட்டில் 1974 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்திற்கான அனைத்து செலவினத்தையும் மத்திய அரசே ஏற்றுக் கொள்கிறது. இதுவரை 42,868 பழம் பொருட்கள் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 2,653 தொல்பொருட்கள், பழம்பொருட்கள் அல்ல என அடையாளம் காணப்பட்டுள்ளன. பொருளாதார குற்றத்துறையின் சிலைத் திருட்டுப் பிரிவிற்கு திருடுபோன சிலைகள் பற்றிய விவர அறிக்கை அளிக்கும் பணியும் இப்பிரிவில் மேற்கொள்ளப்படுகிறது. பழம்பொருட்களை பதிவு செய்து சான்றிதழ் வழங்குவதில்

இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என்பது மிகப் பெரிய பெருமை ஆகும்.

### அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம்

அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் செயல்பட்டு வருகின்றது. 1869ல் தொடங்கப்பட்ட இம்மையம், முனைவர் பட்டம் பெறும் ஆராய்ச்சியாளர்களின் ஆய்வுக்கு மிகச் சிறந்த வளம் நிறைந்தமையமாகத் திகழ்கின்றது. இந்நூலகத்தில் கணிதம், வானசாத்திரம், சித்தா, ஆயுர்வேதம், யுனானி, வேதங்கள், ஆகமம், கட்டடக்கலை, இசை, கவின் கலைகள், வரலாறு மற்றும் பல்வேறு பொருண்மைகள் தமிழ், சமஸ்கிருதம், மராத்தி, உருது, அராபிக் மற்றும் பாரசீக மொழிகளில் 72,000–க்கும் மேற்பட்ட தாள் மற்றும் ஓலைச் சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்நூலகம் பல்வேறு மொழிகளில் வெளியிடப்பட்ட 460க்கும் மேற்பட்ட நூல்களைக் கொண்டுள்ளது.

### சுவடிகள் வள ஆதார மையம்

புதுடெல்லியிலுள்ள தேசிய சுவடிக் குழுமம் இந்தியாவிலுள்ள அனைத்து ஓலைச்சுவடிகளின் விவரங்களைத் திரட்ட திட்டமிட்டுள்ளது. அதனால் தேசிய சுவடிக்குழுமம், தமிழகத்திலுள்ள ஓலைச்சுவடிகளைச் சேகரித்து அதன் விவரங்களை குறுந்தகடுகளில் பதிவு செய்யும் பணிக்கு, தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தினை தமிழகத்தின் சுவடிகள் வள ஆதார மையமாக அங்கீகரித்துள்ளது. தற்போது இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. புதுதில்லி, தேசிய சுவடிக் குழுமம் இத்திட்டத்திற்காக, அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்திற்கு ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதில் முதல் தவணையாக ரூ.4.50 இலட்சம் பெறப்பட்டுள்ளது. இப்பணி நிறைவு பெறும் போது தமிழகத்திலுள்ள அனைத்துச் சுவடிகளின் முழு விவரங்கள் கிடைக்கும். இதனால், பண்டைய தமிழர்களின் நாகரிகம், கலை, பண்பாடு, இலக்கணம், இலக்கியம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் குறித்த விவரங்களை எளிதில் அறிந்து கொள்வதற்கான வசதிகளை பெற இயலும்.

## தஞ்சை பெரிய கோயில் ஆயிரம் ஆண்டு நிறைவு விழா

தஞ்சை பெரிய கோயில் ஆயிரம் ஆண்டு நிறைவு விழாவின்போது நடத்தப்பட்ட சிறப்புக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட கலைப்பொருட்களில் செப்பேடுகள்,

வெண்கலப் படிமங்கள், அகழாய்வுத் தொல்பொருட்கள், கல்வெட்டெழுத்துக்களின் அசல் வடிவங்கள் மற்றும் புகைப்படங்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இக்கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டவைகளில் பெரும்பாலும் சோழர் காலத்தைச் சார்ந்தவையாகும். இக்கண்காட்சியின் போது இரண்டு சிறு கையேடுகளும், பெரிய கோயில் மற்றும் மாமன்னர் இராஜராஜன் குறித்த நான்கு முக்கிய மறுபதிப்பு நூல்களும் வெளியிடப்பட்டன.

## திட்டங்கள்

2010–2011 ஆம் ஆண்டுக்கான பகுதி II திட்டங்களின் கீழ் ரூ.67.07 இலட்சங்களுக்கான திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுவிட்டன.

## முடிவுரை

தொல்லியல் என்பது பண்டைய எச்சங்களை மேற்பரப்பாய்வு மற்றும் அகழாய்வு மூலம் அறிதலாகும். இது வரலாறு, பண்பாடு மற்றும் அப்பகுதிகளின் தொன்மையினை நம்பத் தகுந்த தொல்லியல் சான்றுகளுடன் மறுகட்டமைப்பு செய்வதற்கு நமக்கு உதவி புரிகிறது. இது மானுடவியல், வரலாறு, கலை வரலாறு, சங்கவியல், மக்கள் இன விளக்க நூல், புவியியல், மண்ணியல், மொழியியல், இயற்பியல், வேதியியல், பண்டைய சுற்றுச்சூழலியல், தொல் உயிரியல் போன்ற பல்வேறு இயல்களை கற்பிக்கும் அறிவியலாகும். தற்கால தொழில் நுட்பமான தொலைநுண்ணறியும் இயல் மூலம் மறைந்து கிடக்கும் பழமையான கட்டடப்பகுதிகளை வெளிக் கொணர்வதன் மூலம் வரலாற்றினை நன்கு அறிந்து கொள்வதற்காகவும், சமூக சுற்றுச்சூழலின் மாற்றங்களை அறிந்து கொள்வதற்காகவும் இது பயன்படுகிறது. தொல்லியல் துறை தமிழ்நாட்டின் தொன்மையினைப் பாதுகாப்பதற்கு பல்வேறு திட்டங்களைச் செம்மையாக செயல்படுத்தி, பண்டைய தமிழர்களின் சமூகப் பண்பாட்டு நிலைகளை வெளிக் கொணர்வதற்கு பெருமுயற்சி எடுத்து வருகிறது.

**சி.வி.சண்முகம்,**

**அமைச்சர்**

**பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்**